**2016 ஆம் ஆண்டிற்கான வழங்குனர்களைப் பதிவு செய்தல்**

இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபையினால் 2016 ஆம் ஆண்டிற்கான பின்வரும் பொருட்களையும், சேவைகளையும் வழங்குவதற்காக தம்மைப் பதிவு செய்து கொள்ள விரும்பும் அங்கீகரிக்கப்பட்ட தயாரிப்பாளர்கள், தனிப்பட்ட முகவர் நிலையங்கள், விநியோகஸ்தர்கள், இறக்குமதியாளர்கள், அங்கீகரிக்கப்பட்ட விற்பகர்கள், மொத்த விற்பனை நிலையங்கள், வழங்குனர்கள், ஒப்பந்ததாரர்கள், சேவை வழங்குவோர் போன்றோரிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

| | |
|---|---|
| **1. அலுவலக உபகரணங்களும், காகிதாதிகளும்** | |
| | 1.1 - அலுவலக காகிதாதிகள் (பேனைகள், பென்சில்கள், கடித உறைகள், தாள் தைப்பு முள் கருவிகள் (staples) , எழுதும் (டைப் செய்யும்) தாள், பிரதி பண்ணும் பத்திரங்கள், துடைப்பான்கள் போன்றன ) |
| | 1.2 - அலுவலக உபகரணங்கள் (கணிப்பிடு கருவிகள், தொலை நகல் இயந்திரங்கள், பிரதி பண்ணும் இயந்திரங்கள், கூட்டல் கருவிகள், கையொப்ப இயந்திரங்கள், மற்றும் உபகரணங்கள் போன்றன). |
| | 1.3 – கணணிகளும், கணணித் துணைப் பொருட்களும், இடையறா சக்தி வழங்கல் (UPS), கணிப்பொறி (mouse), கணணி விசைப்பலகை, போன்றன. |
| | 1.4 –அச்சுப் பொறிகளும், அச்சுப் பொறியின் துணைப் பொருட்களும், ( புள்ளியணிகள் - Dot Matrix, மையச்சுப் பொறிகள் Lazer Jet Printer's, வண்ண அச்சுப் பொறிகள், ஒளிப்படக் கடத்திகள் போன்றன) |
| | 1.5 – கணணிப் பயன்படு பொருட்கள் ( அச்சுப் பொறி மைத்தூள் (டோனர்ஸ்) , கெட்டித் தாள் (கார்ட்ரிஜர்ஸ்) , நாடா ரிப்பன், பென்டிரைவ்ஸ், பதிவுக் குறு வட்டு – Recordable CDs/ DVDs, எண்ணியல் காணொளி வட்டு (DVD), வட்டுக்கள் (டிஸ்கட்ஸ்) போன்றன. |
| | 1.6 – அலுவலகத் தளபாடங்கள் - பலகை/இரும்புருக்கினாலான (மேசைகள், கதிரைகள், அலுமாரிகள், நிலையடுக்குகள், அட்டாலை (செல்வ்ஸ் போன்றன). |
| | 1.7 – மின்னுபகரணங்களும், உதிரிப் பாகங்களும் (குளிர் சாதனப் பெட்டிகள், மின் விசிறிகள், குளிரூட்டிகள், போன்றன.) |
| | 1.8 – ஒலி-ஒளிக் கருவிகளும் தொலைத்தொடர்புக் கருவிகளும் (புகைப்படக் கருவிகள், காணொலி ஒளிப்பதிக் கருவி, ஒளி எறிவுக் கருவி மற்றும் செயற்பாட்டு இயந்திரங்கள், வானொலி, நாடாக்கள் (CASSETTES), (டிஸ்கட்ஸ்), தொலைபேசி முறைமைகள், தொலைபேசிகள் போன்றன.) |
| | 1.9 – நாள் முத்திரைகள், இறப்பர் முத்திரை, பெயர்ப் பலகைகள் (அலுமினியம்/பிளாஸ்டிக்/ பித்தளை போன்றன.) |
| | 1.10 – அடையாள அட்டைகளைத் தயாரித்தல் |
| | 1.11- சீருடைத் துணிகள் (ஆண்களின் மேலங்கி, கால்சட்டைக்கான துணிகள், சப்பாத்து மற்றும் காலுறைகள் (கால் மேசு) போன்றன) |
| **2. அலுவலக உபகரணங்களின் திருத்தங்களும், பராமரிப்பும்** | |
| | 2.1 –அலுவலக உபகரணங்களின் திருத்தங்களும், பராமரிப்பும் (கணிப்பீட்டுக் கருவிகள் தொலை நகல் இயந்திரங்கள், பிரதி பண்ணும் இயந்திரங்கள், கூட்டற் கருவிகள், கையொப்ப இயந்திரங்கள், மற்றும் உபகரணங்கள் போன்றன) |
| | 2.2 – குளிரூட்டிகளை பழுது பார்த்தலும், பராமரித்தலும், |
| | 2.3 – அச்சுப் பொறிகள், கணணிகளின் திருத்தங்களும், கணணிச் சேவையகத்தின் பராமரிப்பும், |
| | 2.4 – அலுவலகத் தளபாடங்களின் திருத்தங்கள் (மரத் தளபாடங்கள்/இரும்புருக்குத் தளபாடங்கள்) |
| | 2.5 – சாவி வெட்டுதலும், பூட்டுக்களைத் திருத்தலும் |
| **03. வாகனத் திருத்தங்களும், உதிரிப் பாகங்களின் வழங்கல்களும்** | |
| | 3.1 – மென் வாகனங்களுக்கான டயர்களும், குழாய்களும், மின்கலங்களும் |
| | 3.2 – மென் வாகனங்களுக்கும், மோட்டார் சைக்கிள்களுக்கமான உதிரிப் பாகங்கள், |
| | 3.3 – ஒலி உறிஞ்சிகள், (சைலன்சர்), கதிர்வீச்சுக் கருவி (ரேடியேட்டர்ஸ்), மோட்டார் வாகனங்களின் குளிர்சாதனங்கள் போன்றனவற்றின் திருத்தங்கள் |
| | 3.4 – வாகனங்களின் மெத்தை வேலை ( வாகனங்களின் மெத்திருக்கைகள், மெத்தை உறைகள், இறப்பர் விரிப்புக்கள், மற்றும் திரைச்சீலை உறைகள் ( கென்வாஸ் கவர் போன்றன). |

| |
|---|
| 3.5 –வாகன சேவைகள் |
| 3.6 – சக்கர சீரமைப்பும், சரி செய்தலும் |
| 3.7 – தன்னியக்க மின் திருத்தங்கள் |
| 3.8 – மோட்டார் வாகனங்களை மெழுகுதலும், வண்ணம் பூசுதலும் |
| 3.9 – மோட்டார் வாகனங்களைத் திருத்தல் |
| **04- அச்சிடலும், விளம்பரப்படுத்தலும்** |
| 4.1 – ஓவியக் கலையும், வடிவமைப்பும், விளம்பரப்படுத்தலும் |
| 4.2 – அலுவலக ஆவணங்கள் மற்றும் பற்றுச் சீட்டுப் புத்தகங்களை அச்சிடல் |
| 4.3 – சஞ்சிகைகள், சிறு வெளியீடுகள், விளம்பரச் சுவரொட்டிகள், அழைப்புக்கள் / வாழ்த்து அட்டைகளை (உள்நாட்டு/ வெளிநாட்டு வடிவமைத்தலும், அச்சிடலும், |
| 4.4 – புத்தகங்களை அச்சிடலும்/புத்தகக் கட்டமைப்பும் (சிறு வெளியீடுகள், துண்டுப் பிரசுரங்கள், சுவரொட்டிகள், விளம்பரப் பலகைகள், விளம்பரச் சுவரொட்டிகள் போன்றன |
| **05 – சேவைகள்** |
| 5.1 – பாதுகாப்புச் சேவைகள் |
| 5.2 – அலுவலக பிரிவினைத் தடுப்புக்களை அமைத்தல், உட்புற வடிவமைப்பு, மற்றும் நிர்மாணங்கள் |
| 5.3 – மின் மற்றும் தொலைபேசிகளுக்கான கம்பியிடல் |
| 5.4 – வலையமைப்புக் கம்பி இணைப்பும், பராமரிப்பும் |
| 5.5 – கேட்பொலி / காணொளி ஆவணப்படங்களின் உற்பத்தி |
| 5.6 – கண்காட்சிகள்/ மாநாடுகள் / செயலமர்வுகள் போன்றவற்றிற்கான ஒலி முறைமைகள் |
| 5.7 – கட்டடம் / கண்காட்சிக் கூடங்களில் ஒளியூட்டல் |
| 5.8 – போக்குவரத்துச் சேவை, மோட்டார் வாகனங்களை (வான்கள், மோட்டார் கார், பேருந்துகள் போன்றன) வாடகைக்கு / கூலிக்கு விடுதல் |
| 5.9 – நிகழ்ச்சி முகாமையாளர்கள் / உள்ளூர் மற்றும் வெளிநாட்டு வர்த்தகச் சந்தைகளை ஏற்பாடு செய்தல் |
| 5.10 – மென்பொருள் தீர்வு வழங்குவோர் |
| 5.11 – சரக்குகளை அனுப்புவோர் - வான், கடல் மற்றும் விரைவுத் தூதுப் பணி |
| 5.12 –மொழி பெயர்ப்பாளர்கள் (ஆங்கில மொழியிலிருந்து தமிழ், ஜப்பானிய, சீன மற்றும் ஏனைய வெளிநாட்டு மொழிகளுக்கு) |
| 5.13 – கம்பளங்கள் கதிரைகள் போன்றனவற்றைச் சுத்தம் செய்தல் |
| 5.14 – பீடைகளைக் கட்டுப்படுத்தல் |

**விண்ணப்பச் செயன்முறை**

2016 ஆம் ஆண்டிற்கான ஒவ்வொரு விடயத்தையும் பதிவதற்காக மீளப் பெறப்பட முடியாத பதிவுக் கட்டணம் ரூபா 500 குறிப்பிட்ட வழங்குனரினால் செலுத்த வேண்டியதோடு, இக்கட்டணமானது இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச சபையின் காசாளருக்கு, காசாகவோ, அல்லது இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபையின் பெயரில் வரையப்பட்ட ஒரு காசோலை மூலமோ செலுத்தப்படலாம்.

ஏற்றுமதி அபிவிருத்திச் சபையின் பற்றுச் சீட்டு / காசோலையானது விண்ணப்பப் பத்திரத்துடன் கடித உறையின் இடது கைப்பக்க மேல் மூலையில் **"2016 ஆம் ஆண்டிற்கான வழங்குனர்களைப் பதிவு செய்தல்"** எனக் குறிப்பிட்டு, தலைவர், இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபை, இலக்கம் 42, நவம் மாவத்தை, கொழும்பு 02 என்ற விலாசத்துக்கு 2015 நவம்பர் மாதம் 05 ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக் கூடிய வகையில் பதிவுத் தபாலில் அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

ஒரே நேரத்தில் சகல விடயங்களுக்குமான பதிவுக் கட்டணத்தினைச் செலுத்துவதன் மூலம் பல உற்பத்திப் பொருட்களின் / சேவைகளின் வழங்கலைப் பதிவு செய்வதற்கு ஒரு விண்ணப்பப் படிவத்தினை மாத்திரம் பயன்படுத்தலாம். பூர்த்தி செய்யப்படாத விண்ணப்பப் படிவங்கள் மற்றும் குறிப்பிட்ட திகதிக்குப் பின்னர் கிடைக்கப் பெறும் விண்ணப்பங்களும் நிராகரிக்கப்படலாம்.

மாதிரி விண்ணப்பப் படிவத்தினை எமது இணையத்தளமான www.srilankabusiness.com இன் “Announcements” எனும் பிரிவிலிருந்து பதிவிறக்கம் செய்து கொள்ள முடியும்.

வழங்குனர்கள் மற்றும் சேவைகள் வழங்குவோர்களுக்கான விலை மனுக் கோரல்கள் பொதுவாக பதிவு செய்யப்பட்ட பட்டியலிலுள்ள வழங்குனர்கள் மற்றும் சேவை வழங்குவோரிடமிருந்து கோரப்படும். ஆனால், ஏனைய பதிவு செய்யாத வழங்குனர்கள் / சேவைகளை வழங்குவோரிடமிருந்து கொள்வனவுகளையும் / சேவைகளையும் மேற்கொள்வதற்கான விலை மனுக்களைக் கோருவதற்கு இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபைக்கு உரிமையுண்டு.

மேலதிக விபரங்களுக்குத் தயவு செய்து உதவிப் பணிப்பாளர் / வழங்கல்கள் தொலைபேசி இலக்கம்: 2300728 இன் மூலம் தொடர்பு கொள்ளவும்.

**தலைவர்,**

**இலங்கை எற்றுமதி அபிவிருத்திச் சபை,**

**NDB / EDB TOWER, இலக்கம் 42, நவம் மாவத்தை, கொழும்பு 2**

**தொலைபேசி இலக்கம்: 011-2300705 தொலை நகல்: 011-2300715**

**இணையத்தளம்: www/srilankabusiness.com**